பிசுமில்லாகிற்றகுமானிற்றகீம்.

இஃது,

ஞானவெண்பா.

காட்டாவினை செய்கோலியுல்லா

சாகிபவர்கள் பாடியது,

இஃது

திருநெல்வேலி

ஷேக்மூகம்மது புலவரால்

பார்வையிட்ட பிரதிக்கிணங்க,

பரிசோதித்து.

சென்னை நகர,

பரப்பிரமமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

௧௮௱௮௰௯.

பிசுமில்லாகிற்றகுமானிற்றகீம்.

ஞானவெண்பா.

—(*)—

காப்பு.

ஆனபரனைப்பொரு ளானமெய் யானதொரு
ஞானவெண்பா நூறும் நவிலவே—ஆனதோர்
அண்டாண்டபகி ரண்டபிண்டமும்நிறைந்து
கண்டுகொண்டுநின்றவனே காப்பு.

கடவுள்சிறப்பு.

அஞ்சானகாய மாளுமுபாயன்
மிஞ்சாதிரணமிடுஞ்சூட்சன்-துஞ்சாமல்
முட்டாதமூர்த்தி முதன்முடிவில்லாநாயன்
மட்டுவமையில்லா தவன்.

சக்குக்குத்தூதானோர் கனகஜெபுறயீல்
சக்குக்குஅறுசிலே தானானோர்-திக்கனைத்து
மூத்திரைக்குள்ளேநடத்து முகம்மதுற்றசூல்தானே
நித்திரைக்குள்ளே மறகாநினே. உ

கல்லொதுக்கிக்கொண்டோர் சபிபுக்குவந்தவர்கா
ணில்லொதுக்கிநினி னிறைந்தோராம்-குல்லொதுக்கி
ஆளுமனியானோர் அபூபக்கர்தாள்மலரோ
நாளுமறகே னெஞ்சில் நான். ௩

ஆறுதனைத்திருப்பி யங்கேநடவென்றோர்
மீறுகின்றகாபிர்களை வென்றோர்காண்-ஏறுபுகழ்
பெற்றதனத்திற் பெரியோராமுமறு
கந்தாபுதாண்மலரோ நெஞ்சிற் காண். ௪

ஞானவெண்பா.

வானப்பலகை வரிபார்த்தெழுதுகின்றோர்
தானெத்தசங்கரனைத் தான்பணிந்தோர்-ஞானக்
கடலாமுதுமானார் கான்மலரைநாளும்
உடலாக்கிக் கொண்டோனுவந்து. ௫

வையம்பிளந்ததனோர் மண்ணிலடங்காதோர்
ஐயமறச்சிற்றில் அமைந்தோர்காண்-கையாழி
பெற்றோராறுசிற் புலியாமலிதாளை
வைத்தேனென் னெஞ்சில் மகிழ்ந்து. ௬

ஜென்னக்கனிதின்றோர் திணின்மணியானோர்
அன்னமுகம்மதுக் கரும்போர்-இன்னும்
எங்குமிமாமானோ ரெங்களசனுசைன்றாள்
தங்குமென்னெஞ்சிலே தான். ௭

நாதன்அறுசில் நபியேகும்போது திருப்
பாதமலர்தாங்குகின்ற பார்த்தியராம்-காதிர்
முகியித்தின் தாள்மலரை முப்பழமும்பாலுமாய்
நையப் பிசைந்தூட்டும் நாயினேன். ௮

வாரியுடனே மைதானெனக்கிந்து
ஆரிபாய்நெஞ்சி லமைந்தோர்காண்-மாரிபோல்
காரியாமீறான் கமலவிருதாள்மலரை
மாதிரியாய் வைக்குமனம். ௯

தென்னிருட்டைப்போக்கித் தேசவிளக்கேற்றினோர்
மின்னிருட்டைவென்றெனக்கு மெய்தந்தோர்பின்னிருட்டை
ஆதரியாசைய்குஜமா லளிக்கின்றசெய்குஅப்துல்
காதிறுரைத்த கவி. ௰

நூல்.

மெய்தந்துவிந்தை வினையும்பயிராக்கி
ஐகந்துமுள்ளே அலிபாக்கி-தைதக்க

ஞானவெண்பா.

பீரைக்கொண்டாடிப் பிரதவிப்பதல்லாதி
யாரைக்கொண்டே காரியம்.

தலையிற்சுமந்திருந்து தண்டாளமாகவெனைக்
கலவிவிளையாட்டிற் கருத்தொத்து-நிலமேலே
வநதனுகவேணுமென்று வையகத்திலாக்குகின்ற
தந்தையே யென்றம்பிரான். ௨

உச்சிதனில்வைத்திருந்தே யுள்ளடக்கமாகவெனை
இச்சைபெறமாதரிட மேகியே-அச்சிலே
கதாவொன்றுமில்லாமற் காசினியிலாக்கும்
பிதாவே யெனக்குப் பிரான். ௰௩

வானத்திருந்தேன் மதம்பொழிந்தேன்மாதாவின்
தானத்தில்வந்து தரித்தேன்-ஊனற்ற
தொண்ணூற்றாறுதத்துவமாய்ச் சுருபமெனுஞ்சடைத்தேறி
எண்ணத்திலானே னினி. ௰௪

தொட்டோம்சகத்தைச் சும்மாவிருந்தோமே
விட்டோம் துனியா விழிமயக்கைக்-கட்டோடு
கன்னசகூட்டத்தைக் காணுமலேநபியையு
யெந்நாளுங்காணேயினி. ௰௫

முன்னுரைத்தமந்திரத்தில் மூலந்தெரிந்தெடுத்துப்
பின்னுரைத்தபோது பிரிவுண்டோ-தன்னுரைத்த
காட்சிபெறவேண்டியதாற் கத்தாவருளுகின்ற
பேச்சைப் [illegible]க்கப் பிடி. ௰௬

முன்கண்டகாட்சி மூலமருந்தாகப்
பின்கண்டபோது பிரிவுண்டோ-தன்கண்ட
காட்சிபெறமாட்டார்கள் கத்தாவருட்கடலின்
சூட்சமறியாதோர்கள் சொல். ௰௭

ஞானவெண்பா.

கற்பித்தார்கற்பித்தார் கசகசவின்பிரமாணம்
கற்பித்தாரேயெனக்குக் கற்பித்தார்-கற்பித்தார்
கைச்சிட்டுந்தந்தாரே காசினியெல்லாமாள
மைச்சிட்டுக்குவ்வே மயம். ௰௮

மயம்பெறலாம்வானத்தின் வாசற்றிறந்ததற்பின்
ஐயம்பெறலாமிருவகையு நாமாகில்-ஜெயம்பெறலாம்
ருட்சமெனும்வாசற் றுறந்துவைதத்தூங்கியபின்
மோட்சமெனும் வாசலிலே முத்து. ௰௯

நாச்சைபொருகுத்தாக்கி நல்விழியைத்தானேரோ
நோக்கியேயோரெழுத்தி ஞேடேற்றிப் பார்க்கப்
பாவர்திகாாம்பலத்திற் பாங்குடனேதூங்கியபின்
சைபதியைக் காணலா நாம். ௨௰

கசகாதேசற்றுங் காமப்போரானாலும்
பிசகாதேயாது பிரியாதே-இரசவாத
வித்ததனைத்தந்தாரே மெய்யாமுகியித்தின்
சித்ததனைத் தந்தார் தெளி. ௨௧

எந்தப்பபிரு மிருக்கும்பதருடனே
அந்தப்பதர்போக்கி யறிவித்தாற்-சிந்தைதனிற்
பேணியதைச்செய்யவே பெரியோர்விலைமதியா
ஆணிமுத்தாமே யது. ௨௨

பொங்குகடலேழும் புவனமோரீ[illegible]
மங்காமல்நின்றநபி மகுமூதே-அங்கந்
தனிமேலகுருவைச் சக்கன்றிக்கண்டா
லெனிமேல வெள்ளியா மிறப்பு. ௨௩

இறப்பைப்ப[illegible] வெருகடலுக்கப்புறமாங்
குருவையறிந்தா குருவாகிக்-குருவைப்போற்
கோலமெலாங்கொண்டு குருவடிவமானதின்பின்
அலகறியென்றே யறி. ௨௪

ஞானவெண்பா.

அறிந்துகொண்டுகூடி யனுபோதஞ்செய்யவே
அறிந்தாலொழிய விளங்காளே-அறிந்தால்
இருவர்சுகபாத்திர மின்பப்பாராட்டிலே
இருவருமற்றவிடம். உ௫

சித்தெழுத்துவிரேழு தேசப்பாந்தனுவாய்
மற்றெழுத்தெல்லாமமைந்த சித்தெழுத்தாம்-சித்தெழுத்து
மணியரும்புமாணிக்க மண்டலமேகொண்டதிரை
அணியரும்பு தானென்றே யாம். உ௬

ஆமென்றெழுத்தை யணுமென்றறிந்து அதை
ஓமென்றுபார்த்தோ ரொலியாவார்-நாமென்ற
உன்னிட்டுமற்று உணர்வற்றபின்னந்தக்
குன்னிறைந்த தாமே குதாய். உ௭

கண்டுமனங்கொண்டு காட்சிதனைப்பெற்றோர்கள்
என்றுமேசாகா திருப்போரோ-ஒன்றே
குத்துநெடுங்கீற்றாகிக் கூண்டசுழியாகியெங்கும்
சித்துவிளையாடுஞ் செயல். உ௮

காலமலர்தன்னிற் கண்மூன்றுநேரிட்டால்
ஆலமலரு மலருமே-ஞாலம்
புரக்குமருமூதுதமைப் பூவாசம்கொள்வார்
இருப்பா விகாவி லிடம். உ௯

மலர்க்காலமுகமமதாம் வாசமேறெப்பாகும்
அலர்ந்தாலுமங்கே யதுசுமாய்-உலர்ந்தாலோ
காயுங்கனியாகுங் கற்பித்தார்சொற்படியே
மாயையிது மூன்று மாம். ௩௰

ஓடுங்குதிரைதனை யுட்கடிவாளம்பூட்டி
வாடிமறந்தநினை வாறுக்கால்-ஆடும்
கூடமணிக்குணவுபோற் காணுமொருகிற்று
கூடமணிக்குள்துளகுதாய். ௩௧

சங்கக்கடலிற் றாளம்பிறந்ததென்று
அங்கக்கடலுக் கணையமேன்-எங்கே
எனைத்தேடிவந்ததே யில்லெனும்சொல்ல
தனைத்தேடி லஞ்செழுத்துத் தான். க௨

அஞ்செழுத்துமொன்றி லடங்குந்திருச்சூட்சம்
பிஞ்செழுத்துமீமேன்பூத்தையலே-நெஞ்சகத்தில்
ஓடியேதானிடையி லுற்றஅவிபாக்கியத்தை
நாடுமுகம்மதா நாம். க௩

தெரிந்தவிழியார்கள் தேர்ந்துபிரான்றன்னைப்
பிரிந்தால்நரகம் பிசகில்லைப்-பிரிந்தா
லுள்ளதேபோது மொளிவிலொளிவான
வள்ளலைப்போ லாகு மனம். க௪

தெரிந்தவெழுத்ததனைச் செப்பவொருநாக்கத்தாம்
இருந்துநுனிநாவுகொண் டேற்றியே-தெரிந்தோரோ
உள்ளாட்டங்கொள்வோர்க் கொளிவேபாங்தோங்கி
யெள்ளாட்ட மாமே யினி. க௫

குத்துமுலைப்பாலன் குமரிகிழவியெந்தன்
சித்தமயக்கிதனைச் சேரவே-யுற்று
மந்திரமேயாங்கார மருந்தாகும்புத்தியறி
தந்திரமே யாகுமது தான். க௬

கம்பத்துக்குள்ளிருந்து கைகாட்டும்பெண்ணமனைச்
இன்புற்றுச்சேர்வதற்கு என்செய்வேன்-அன்புற்று
மந்திரமேகூகூ மருந்தனுவாகும்பார்வை
தந்திரமே கியானமது தான். க௭

வாசற்றிறந்துசென்று வடிவில்லாப்பெண்ணாசைப்
பூருந்தனத்தின்மேற் புல்லிறைற்-பார்வைத்
பலவகையுமில்லையே பார்முறைமையில்லையே
சொலவகையு மில்லையென்று சொல். க௮

ஞானவெண்பா.

தாயுமாய்த்தந்தையுமாய்த் தன்பெண்டுபிள்ளையுமாய்
ஆயுமுடற்பிறப்பு மானதுபார்-மாயாத
சூத்துச்சறுங்கி குன்சத்தத்துடன்வந்து
வித்துக்குள் முத்தென்று விள். ௩௯

ஐவரையும்பெற்றளே யம்புவியிலாண்பெண்ணுஞ்
செய்யுந்தொழிலின்பஞ் சேராணுள்-குய்யந்
தொடுத்துஅகதுஅயின் சூட்சம்வகையாணிறைந்து
படுத்தாளே பெண்பிள்ளை பார். ௪௰

கொண்டகொண்ட கோலம்கூத்தும்பலவகையா
யெண்டிசையெல்லாம்நிறைந்த தென்னமோ-வண்ணுடசாச்
சந்திரனுஞ்சூரியனுங் தானறியாத்தம்பிரான்
வந்துவிளையாடுகின்ற வாறு. ௪௧

துறக்குமுன்னேயுள்ளிருக்கும் சூட்சம்வெளியாமோ
கறக்குமுன்னேபாலின்பங் காணுமோ-துறக்கவே
அஞ்செழுத்துக்கோலதனை யாட்டியுபாயமதாய்
நெஞ்சகத்துக்குள்ளே நினைந்து. ௪௨

துறந்தால்மறைவேது சொல்லாமூலமதாங்
மறந்தாலுமங்கே மயக்கமாம்-இறந்தாலு
சாவதுவேபொய்யாமே தாசணியெல்லாந்திரும்ப
ஆவதுவே மெய்யாகு மாம். ௪௩

தெளிவுகலங்குமோ திரைகடலிலேக்காத்த
புளியின்பமேலே பொங்குமோ-அளியறியாப்
புண்ட[illegible]கமுண்டோ பிண்டந்தனிற்றெளிந்து
கண்ட[illegible]றியார்க் கேதுமறை காண். ௪௪

-உலையில[illegible]ன்மூட்டி யுப[illegible]க்கடல்தோத்து
அலையிலொருமுத்து அங்குதித்துக்-கலைஞரறியாச்
சூரி[illegible]னுங்காந்தி[illegible]போற் சொல்லுகின்றமெய்ஞ்ஞானம்
பாரி[illegible]நிறைந்[illegible]தே பார். ௪௫

பார்க்கமணியின் பார்வையசையாமல்
நோக்கவெளியாமேனுஞ்சூட்சம்-ஆர்க்கும்
பொதுவென்றுசொல்லியே பேசுகின்றமெய்ஞ்ஞானம்
அனுவறிந்தோரையமற்றோ ராம். ௪௬

ஐயமறுமோ அம்புவியில் மானிடர்கள்
பொய்யிலிருக்குமட்டும் போகாதே-மெய்யான
அருவத்திற்காந்தம் சூரியனிலேசூட்சம்
அருவத்திலாகுமட்டு மாம். ௪௭

ஆமென்றசத்தத் தாசையொழிந்தபின்பு
காமனைவெல்லக் கணையுண்டே-ஆமாமே
சதிநாலுஞ்செத்துத் தளம்பாமல்மூத்தா
மதினுவுக் கொத்த மனம். ௪௮

மனத்தாலெடுத்தநல்ல மாளிகையினுள்ளே
இனத்தாருமில்லாத சித்துண்டே-கனத்தானை
கட்டியேசூட்சக் கடல்தனிலேமூழ்கினால்
முட்டியொருமுத்து வரும். ௪௯

அம்மாவின்பால்பெற்று ஐயாபசிதீர்ந்தோம்
இம்மாவின்பாலை யென்செய்வோம்-சும்மா
இருக்கச்சுகந்தந்த சற்குருவைஒருநா
ளுரைக்கமனந்தானே யுயிர். ௫௰

உயிர்கோலங்கொள்ள வைதுந்துருத்தியதை
அயிராபதத்தின்மே லம்மம்ம-பயிராக
முளைத்தமுளைதானே முன்கண்டாப்போலக்
களைத்துக் கவர்நீக்கியபின் காணு. ௫௧

காணும்படிக்கே ககனப்பதிதனிலே
தோணுகின்றகாந்ததிசை சூட்சமதால்-வேறுமென்று
பொருளைத்துளைத்துள்ளே புகுந்ததின்பின்சூட்சம்
அருளையறிவார்களே யாம். ௫௨

ஆமென்றுபார்க்கவே யந்தச்சொல்லெல்லாம்
ஓமென்றுநிற்குமே யோரெழுத்தாய்-[illegible]மென்று
மறைந்துஉறைந்த மனமாயையாலெங்கும்
நிறைந்தெல்லாம் நீயெனவே நிற்கும். ௫௩

நிற்குகின்றநின்கோலம் நீயறிவதல்லாமல்
மிக்கவெவரும் விளம்பரிதே-பக்குவமாய்
ஆதிபதந்தொட்டு அக்கருத்தில்லைவத் [illegible]ணர்ந்தா
நீதிபெறுவாரே நிதம். ௫௪

பச்சைக்கடலிற் பவளமலைக்குள்ளிருக்கும்
உச்சிதத்தைத்தானறிந்து உணரவே-தச்சன்
சமையனுண்டாக்கித் தானேபிரசங்கம்
அமையும்படியாமென்று ரஞ்சும். ௫௫

அஞ்சுவகைகொண்டே யமிர்தமலைக்குள்ளிருக்கும்
கொஞ்சுகிளியானைக் கூப்பிட்டால்-வஞ்சியவள்
சங்குடனேபூமலரும் கண்மணமுசேரிட்டா
விங்குவருவாளென் றெண்ணு. ௫௬

எண்ணுங்கணக்கை யெல்லாப்பொருளுடனே
புண்ணும்புளியும்போற் கண்டவர்க்கே-கண்ணாடி
பார்த்துமுகங்கண்டிருந்த பரிசதுபோலாகவே
கூர்த்துமுகங்காண்பார் குணம். ௫௭

கூத்தேயனைத்துங் குறையுடனேமீமதனைச்
சேர்த்தபடிஞானமது செப்பக்கேள்-காற்றைப்
பிடித்துருவமாக்கென்றார் பேசந்தரீக்கத்திற்
குடிபிருப்பென்றுசொல்லிக் கூறு. ௫௮

கூறுகின்றமெய்ஞ்ஞானம் கூண்டபிறையோடே
ஆறுகின்றகிர்த்திகை வாணைக்கா-லேறும்
அருள்போலுடம்பாகு மதிபிலேவட்ட
வுருவுவெள்ளி யாகுமென் றுன்னு. ௫௯

உன்னிபுன்னியேறு முயர்ந்தமலைமேலே
அன்னிஜைடுவேலா கூத்தாய்-நங்கிபின்னி
அற்றறாந்துபோனாலே யாகுமென்றார்மகுரி
பத்தென்று சொன்னார் பயின்[illegible]. ௬௰

தர்க்கமிடுகாருத்திற் று[illegible]வணக்கமுமாய்
மக்கநகர்சுற்றிவர வேணும்-ஒக்குமே
மதினாவிற்காட்சிபைபித்துல்முக்கத்திசிற்
கதிபெறுவார் கண்டவரே காண். ௬௧

சாணைவரீதாகுமென்றார் கனகப்பதிமேலே
மூணும்மைபித்துல்மகு மூறாய்-வேணுமென்று
சித்துக்குட்சித்தாகித் தெளிவில்வெளியானதொரு
வஸ்துக்குள் மூந்து வரும். ௬௨

ஒருமேயுணர்ந்தோர்க்கு வல்லோன்றருமத்தும்
தருமேஅல்கம்மது தனபதியும்-உருமேவு
இரவுபகலற்றிடமே யிடும்புபசியற்றிடமே
பருவமது வற்றிடமே பார். ௬௩

பாருமேகூறாதும் பாங்கரிசுறுபீல்
ஆருமேதீங்கும் சூறுணைக்கால்-நூறுக
நுனியில்நின்றுடுமே நூலைத்தொடுத்தோடி
மணிமுசா நபியின் வழி. ௬௪

வழிபெறலாமிந்த வையந்துறந்தபின்பு
ஒளிபெறலாமுள்ளே யுலாயதோர்-களிகூர
மூசாநபியுமடுக்குதலும்போலவே
காஜத்தெப்போ மப்போ காண். ௬௫

சித்தனுபாயந் திருவுளத்தின் சொற்படியே
யுத்தநிலைவாறு லொருமித்துச்-சித்தன்
திருப்புமிடமெல்லாஞ் சீவனுங்கூடு
விரும்படித்த கொல்ல னிடம். ௬௬

இடம்பூரியா யிலாமலிபு மேலே
உடம்பசையாச்சம்மட்டி போங்கியடி-யுடம்புருகித்
தட்டிச்சமைக்குஞ் சமையதுபோலவே
மட்டிற்சமைக்கு மனம். ௬௭

மனமாயையாலே மயங்குவதேயல்லாம
லினமாயையாலே யென்செயலா-மனமாயை
கொண்டதேயல்லாமற் கூத்துவேவையகத்தில்
லுண்டோகா ணென்றே யுணர். ௬௮

உரைத்தசொல்லெல்லா முபாயத்தாலல்லாற்
கரைத்தவெழுத்தைக் கருத்தாக்கி-யுரைத்த
கலத்திலேயேற்றிச் சங்கமட்டுஞ்சென்றாலும்
நிலத்திலுபாயமாய் நில்லு. ௬௯

நில்லுஅசையாதே நித்திரைக்குணித்திரையாய்க்
கொல்லுமுடம்பைக் குறுபான்செய்-வெல்லவே
பொழுதுநிலவும் புகுதா விடந்தனிலே
பழுதில்லான் குட[illegible]தைப் பார். ௭௰

வையப்புரப்பதுவும் வானந்துறப்பதுவும்
உய்யப்படியா ருதவியாய்ச்-செய்யும்
வகையையறிந்திரா பாணிட விரிந்தத்
தொகையையறிந்திரா சொல். எக.

சொல்லுமெய்ஞ்ஞானத் தொகையறிந்தஞானிகளே
அல்லில்மதிதீய்ந்து அற்றதெங்கே-வல்லார்கள்
ஞானத்தெளிவுதனில் நாடியிருந்தோர்கள்
பாணித்துச் சொல்லப் பயம். எஉ.

பயமல்லோ லோகம் பழிசெய்யுமென்றல்ல
அயனைட்டார்சொல்லை அறிந்துணையார்-ஜெயமாகத்
தீர்வின்றஞானத் தெளிவிலவெளியானோர்
ஓங்கின்றழுவா ருவந்து. எங.

மூன்றொளிரவுபகன் மூதுரையுமில்லாறு
சொன்னபடியா யிருந்தது சொல்-பொன்று
விளைகின்றஞான வெளிச்சுத்தோர்க்கலலாற்
பிறைகண்டாற் பேசுவரோ பின். எச

பேரும்சுபமுண்டாம் பின்றனக்குமத்திபத்தைக்
கூறுமோஞானக் குறிப்போரோ-வேறாகச்
சாந்தமலைச்சூட்சம் கடலறிவதல்லாது
மீண்டாமறிந்துணையா மின். எரு

கோலமிரண்டுங் குறித்தொன்றாய்நிற்குகின்ற
ஜாலமறிந்திதன்ன தெனத் தானுணையிர்-மூலமே
பொழுதுநிலவுமொன்றுப் போனக்காற்போமெனவே
எழுதமனுவோர்க்கே யிசை. எசா

இசைக்குகின்றகனவு விருக்கையிலேபேசாமல்
அசைக்குகின்றதென்ன அருளாயோ-உசைக்குகின்ற
கணக்கினழுத்தாணி கைவசத்திலில்லாமற்
குணக்கதாய்ப்போச்சுதென்றுகூறு. எஎ

கூறுகின்றசத்தங் குழைதனிலேசெல்லாமல்
ஆறிமறைந்ததென்ன வையாசொல்-மீறியது
தப்புப்பிடிப்பவன் சூட்சம்விலகியதால்
அப்பாது போச்சுக்கயாம். எஅ

ஆமாப்புவியேழு மசையா திருக்கையிலே
ஓமாம்ஒருபுற மூகம்புவதேன்-நாமான
உடம்பையறிந்தோர்க ளுபாயமறிந்து அதைத்
திடம்படுத்தச் சொல்வார் தினம். ௭௯

தினமிவ்வாறேகுந் திடனாய்க்குறைதிரும்பிக்
கனதிபெறநிற்பதென்ன காரணஞ்சொல்-மனம்பெறவே
ஆத்துமாக்காரனுக்கு அங்கேயுதவியான்
கூத்தென்று சொல்வார் குறித்து. ௮௰

மின்னெழுத்தாத்தானெங்கே வியனைகத்தான்மறைந்த
தன்னெழுத்தங்கேது தலைவரோ-மின்னெழுத்தை
அறிந்துணர்ந்தஞானிகளே யங்கத்துள்மின்னெழுத்தைப்
பிறிந்திருக்க மாட்டார்கள் பின். ௮௧

பின்குறிப்பைநீகண்டு பேசிமுழங்குகின்ற
தன்குறிப்பைச்சொல்லுந் தலைவரோ-தன்குறிப்பு
ஒப்பில்லைச்சொல்ல வுபாயத்தாற் சொன்னவரைத்
தப்பாமலே தருவாய்ச் சாற்று. ௮௨

சாற்றுங்கருவிதனிற் றன்வளர்ந்தஜீவருமாய்ச்
சேர்ந்துநின்ற தின்னதெனச் செப்பாயே-ஆத்துமாக்
குள்ளிருந்தும வல்லிதனை யுபாயமறிந்தநல்ல
சன்னாறிவார்களே காண். ௮௩

காணுமேவெப்பதிலே கலந்தோடுமப்பதுபோற்
றோணைநடப்பதென்ன சொல்லாய்நீ-வேணுமென்று
ஞானமெல்லாம்சொல்லி நடத்தலாமத்துடைய
தானமே சொல்லரிது தான். ௮௪

தானுருமுன்னே சங்கக்கடலெங்கே
வானுருமுன்னே யுயிரெங்கே-தேனைக்
கசிகின்றஞானக் கருத்தாலறிவதல்லாற்
பிசகின்றாற் பேச்சறியார் பின். ௮௫

காயனூர்நல்ல கச்சவடஞ்செய்யவே
ஆயனூரெல்லா மறியலா-நாயகமா
மக்கத்திற்செல்லவே மலையாளந்தன்னிலே
வர்க்கமென்னும் பொன்னைலே வாழ்க்கை. ௮௬

கைகண்டவித்தையிது கடலேறிப்போகவே
ஐகொண்டகப்ப லலங்கரித்து மைகொண்ட
பருநுதனிலோடி மாலினுணைப்படியே
சஃறு மறபுதனிற் சாரு. ௮௭

சாருகின்றபோது தன்னொளிக்கோப்பாகி
ஊருகண்டுதீனபிக்கே யுரைகலிமாப்-பேருகண்டு
அல்கம்துமோதியே ஆமீனுங்கூறியே
செல்லுங் கரைதனிலே சேர். ௮௮

சேருங்கரைதனிலே தீன்பயிர்கள்தான்விளைத்துப்
பாரும்பலன்கொடுக்கும் பாக்கியத்தை-ஊர்தனிலே
கரைவழியேபோகவே கள்ளர்மிகுதியுண்டு
துணைமனிதரொன்றுநீ சொல்லு. ௮௯

சொல்லுதுணைபெயரைச் சோரங்கள்வாராது
கொல்லுமனமுன்னோடு கூடினால்-வெல்லலா
மக்கத்திற்சென்று வரிசைகச்சுசெய்தபின்பு
மிக்கமதி னாநகர்க்கு மேவு. ௯௰

கண்டேன்மதீனாவிற் கபிபுமுகம்மதுக்குக்
கொண்டேனேயீமான் குறையாமல்-நன்றாக
உள்ளும்புறமும் ஒருமித்திசுலாமாய்
வள்ளலிறசூல் நபியின் வாறு. ௯௧

வாறுகுமிந்த வழிநடந்தபேர்களுக்கு
வீறுகுமங்குமிங்கும் வெற்றியுண்டே-பேறாக
நிறைந்தநல்லீமானிசுலா மிதுவெனவேநாளும்
அறிந்தா ரறிந்தோரே யாம். ௯௨

ஆமேலிகாவும் ஆண்டோன் முடுகுதலும்
சாம்போதுகுட்சமதாய்ச் சாகுதலும்-ஆமே
தாரணியேழுங்கைசாய்க்க அ சாண்டு
வார்ணமதை வெல்லாம் வந்து. ௯௩

வந்துநபியின் வரிசைச் சறகுடனே
சிந்தைமகிழ்ந்து செயலெல்லா-முந்தவே
கைபிடித்தபீரின் கதத்தைப்பிரியாமல்
மெய்பிடித்து நின்றுவிளை யாடு. ௯௪

ஆடுகின்றகீர்த்தி ஐம்பதுகண்ணாடி
நாடுபொருள்தன்னையே நற்குருவாய்த்-தேடுவரே
தேசிகனைத்தானே சிந்தைமகிழ்ந்து வெங்கும்
வாசம்பெறுமே மனம். ௯௫

மனமேநினைவு மயக்கத்திற்றெண்டிப்புங்
கனவுதனிலுள்ளங் கசியுதலும்-தினமுமே
தாயும்பொருளுந் தாரணிக்கேயொப்பாகும்
ஆகிவரு நேர்மையது வாம். ௯௬

ஆமாமேழிவழியு மாண்டோன்றருமத்தும்
நாமாமேசுபிமனுடர் நாமாமே·கோமான்
இருப்பைப்பறலாக்கி யெங்கோமுப்பிரைத்
தரிப்பைப் பறலாக்கத் தான். ௯௭

தானேயுவமை தரிப்புமில்லாதபொருள்
தானேதனக்குச் சரியானேன்-தானே
கண்டுவமைக்கொப்பில்லைக் கத்தாவைநெஞ்சிலே
அண்டுவமைக் கொப்பாகு மஞ்சு. ௯௮

அஞ்செழுத்தைத்தந்தகுரு அன்பத்தோரட்சரமாய்
நெஞ்சகத்தில்நின்றுநினை வானோர்காண்-துஞ்சமற்ற
ஆதியிறசூல் ஆதமிம்மூன்றும்
பேதலியாதே ஞானமே பீர். ௯௯

பீறைக்கணக்காற் பொருக்கியே மூவர்க்கும்
கூரவேஇய்யூறு குத்தாகும்-நேரே
குத்ததனைப்பார்க்கிற் குவலையங்களீரேழும்
பெற்றதுவே குத்தாகும் பீர். ௱

இருப்பாகும்நாசூத்தி விருந்தேமலக்கூத்திற்
றரிப்பாம்ஜெபஹூத்திற் றுணைக்-கிரிப்பும்
விளையாட்டுமாகவே மெய்ஞ்ஞானலாகூத்தில்க்
களைதீர்ந்திருக்கக் சடன். ௱௧

ஞானவெண்பா
முற்றிற்று.

வேறு கலித்துறை.

காந்திகொண்டெங்கு முடம்பெபாந்து கலந்துமுள்ளே
பாந்தியிருக்கும் பலமறியாவிந்தப் பார்மனுவீர்
ஆந்திவடிவு மங்குள்ளநேர்மையு மறிந்துணர்ந்தாற்
சேந்தியிழையில் மதயானைபட்ட செயலொக்குமே.

ஏகமறிந்து மனுவேப்பாந்து மெண்சாணுடம்பில்
ஆகமிருந்த தறிந்திலையே யையோமனுவீர்
பூசமிருந்து நாலங்காரனைப் புகழ்ந்துகண்டாற்
காகமிருந்து பனங்காய்விழுந்த கதையொக்குமே.

முற்றிற்று.